**<u>கொண்டக் கடலை</u>**

1. ஆல்டர்னேரியா இலைக்கருகல் : **<u>ஆல்டர்னேரியா அல்டர்னேட்டா</u>**
2. அஸ்கோகைட்டா இலைக்கருகல் : **<u>அஸ்கோகைட்டா ரபியி</u>**
3. போட்ரிடிஸ் கிரே மோல்டு : **<u>போட்ரிடிஸ் சினேரியா</u>**
4. கழுத்தழுகல் நோய் : ஸ்கிலிரோசயம் ரால்ஃசி
5. உலர் வேரழுகல் நோய் : **<u>ரைசக்டோனியா பெட்டடிகோலா/மேக்ரோபோமினா</u>**
6. ப்யூசேரியம் வாடல் நோய் : **<u>ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போராம் வகை பேசியோலினா சைசிரி</u>**
7. சாம்பல் நோய் : **<u>ஆஸ்டியாப்சிஸ் டாரிகா</u>**

**1. ஆல்டர்னேரியா இலைக்கருகல் : ஆல்டர்னேரியா அல்டானேட்டா**

**<u>அறிகுறிகள்:</u>**

1. இந்நோய் பூக்கும் தருணத்தில் ஏற்படுகிறது.
2. இலைகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.
3. பாதிக்கப்பட்ட செடியில் அடியில் உள்ள இலைகள் உதிர்கின்றன.
4. இலைகளில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றுகின்றன.
5. பாதிக்கப்பட்ட காய்கள் கருப்பு நிறத்தில் மாறுகின்றன.

6. பாதிக்கப்பட்ட விதைகள் உதிர்ந்துவிடுகின்றன.

<u>கட்டுப்பாடு:</u>

1. அதிகமான நீர்ப்பாய்ச்சுதலை குறைக்க வேண்டும்.
2. மேங்கோசெப் 3 கிராம்/லிட்டர் அல்லது கார்பன்டாசிம் 1.5 கிராம்/லிட்டர்

**2.அஸ்கோகைட்டா இலைக்கருகல் : <u>அஸ்கோகைட்டா ரபியி</u>**

<u>அறிகுறிகள்:</u>

1. செடியின் அனைத்து பாகங்களும் பாதிக்கின்றன.
2. இலையின் மேல்பரப்பில் அறிகுறிகள், புள்ளிகளாக தோன்றுகின்றன.
3. இலையின் மேல்பரப்பில் வட்ட வடிவ பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படுகின்றன.
4. சாதகமான சூழ்நிலை வரும்பொழுது இச்சிறிய புள்ளிகள் பெரியதாகி இலைகள், காய்கள் காய்ந்துவிடுகின்றன.
5. தண்டு மற்றும் இலையின் காம்புகளில் இந்நேரய்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.
6. இந்நோய் மெதுவாக தாக்கினால் விதைகள் காய்ந்தும், உதிர்ந்தும் விடுகின்றன.
7. வயலில் தங்கியிருக்கும் முந்திய பயிரின் கழிவுகளால் இந்நோய் பரவுகிறது.

<u>கட்டுப்பாடு:</u>

1. நல்ல தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்.
2. பயிர் சுழற்சி முறையை பின்பற்றவேண்டும்.

3. ஆழமாக உழவேண்டும், ஊடுபயிராக, கோதுமை, கடுகு ஆகியவை போடலாம்.

4. விதையை கார்பன்டாசிம் 3 கிராம்/கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்யலாம் அல்லது மேங்கோசெப் 3 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலரம் அல்லது உலர் கந்தகத்தை 2.3 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**3.போட்ரிடிஸ் கிரே மோல்டு : போட்ரிடிஸ் சினேரியா**

<u>அறிகுறிகள்</u>

1. செடிகள் கூட்டம் கூட்டமாக இறந்து விடும், விதைகள் உருவாக தாமதமாகும்.
2. பாதிக்கப்பட்ட இலைகளும், பூக்களும் உதிர்ந்துவிடுகின்றன. இவைகளின் மேல் பூஞ்சாண வித்துக்கள் படிந்திருக்கும்.
3. தண்டின் மேல் கோடுகள் போன்ற தோற்றம் காணப்படும்.
4. இளம் கிளைகள் ஒடிந்துவிடும், பாதிக்கப்பட்ட பூக்கள் பழுப்பு நிறமாக மாறிவிடும்.
5. காய்களின் மேல் உள்ள கோடுகள், ஒழுங்கற்றதாக இருக்கும்.

<u>கட்டுப்பாடு</u>

1. நல்ல தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்.
2. பயிர் சுழற்சி முறையை பின்பற்றவேண்டும்.
3. ஆழமாக உழவேண்டும். ஊடுபயிராக, கோதுமை, கடுகு ஆகியவை போடலாம்.

4. விதையை கார்பன்டாசிம் 3 கிராம்/கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்யலாம் அல்லது மேங்கோசெப் 3கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலரம் அல்லது உலர் கந்தகத்தை 2.3 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**3.போட்ரிடிஸ் கிரே மோல்டு : <u>போட்ரிஸ் சினேரியா</u>**

<u>அறிகுறிகள்</u>

1.செடிகள் கூட்டம் கூட்டமாக இறந்து விடும், விதைகள் உருவாக தாமதமாகும்.

2.பாதிக்கப்பட்ட இலைகளும், பூக்களும் உதிர்ந்துவிடுகின்றன. இவைகளின் மேல பூஞ்சாண வித்துக்கள் படிந்திருக்கும்.

3.தண்டின் மேல் கோடுகள் போன்ற தோற்றம் காணப்படும்.

4.இளம் கிளைகள் ஒடிந்துவிடும், பாதிக்கப்பட்ட பூக்கள் பழுப்பு நிறமாக மாறிவிடும்.

5.காய்களின் மேல் உள்ள கோடுகள், ஒழுங்கற்றதாக இருக்கும்.

<u>கட்டுப்பாடு</u>

1.கோடையில் ஆழமாக உழவேண்டும்.

2.விதையை கார்பன்டாசிம் + கிராம் (1:1) 3கிராம்/கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்யலாம்.

அல்லது

கேப்டான் 5-6 கிலோ/ஹெக்டர் 15 நாள் இடைவெளியில் அல்லது கார்பன்டாசிம் 1.5கிராம்/லிட்டர்/மேங்கோசெப் 3 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**4.கழுத்தழுகல் நோய்: ஸ்கிலிரோசியம் ரால்ஃப்சி**

**அறிகுறிகள்:**

1. இலைகள் காய்ந்து மஞ்சள் நிறத்தில் காட்சியளிக்கும் வயல்களில் இந்நோய் அங்கும் இங்குமாக பரவியிருக்கும்.

2. நாற்றுகள் வெளிர் நிறமாக மாறிவிடும்.

3. வேர் பகுதியும், தண்டுப்பகுதியும் சேரும் இடத்தில் சற்று அழுகி இருக்கும்.

4. பாதிக்கப்பட்ட பகுதிகள் **ஸ்கிலிரோசியா** என்னும் வெள்ளைப் பூசணம் படிந்திருக்கும்.

**கட்டுப்பாடு:**

1. கோடையில் ஆழமாக உழ வேண்டும்.

2. விதைக்கும் சமயத்தில் அதிகப்படியான ஈரப்பதத்தை தவிர்க்கவும்.

3. விதைப்பதற்கு முன் முன்பயிரின் கழிவுகளை அகற்ற வேண்டும்.

4. விதையை கார்பன்டாசிம் 1.5 கிராம் மற்றும் கிராம் 1.5 கிராம்/கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்யலாம்.

**5.உலர் வேரழுகல் நோய் : ரைசக்டோனியா பெட்டடிகோலா/மேக்ரோபோமினா பேசியோலினா**

அறிகுறிகள் பக்கம் 38

கட்டுப்பாடு

**6.ப்யூசேரியம் வாடல்நோய் : ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போரம் வகை சைசிரி**

1.செடியின் எல்லாவிதமான வளர்ச்சி நிலையிலும் இந்நோய் வருகிறது.

2.வயல்களில் அறிகுறிகள் திட்டுதிட்டாக இருக்கும்.

3.விதைத்த 3-5 வாரங்களில் இந்நோய் பரவி நாற்றுகளை கீழே சாய்ந்து விடுகின்றன.

இதனால் வெளிர் நிறமுடைய இலைகளும் ஒடிந்த தண்டும் காணப்படுகிறது.

4.தண்டின் உள்பகுதி பழுப்பு நிறத்தில் காணப்படும்.

**கட்டுப்பாடு:**

1. கோடையில் ஆழமாக உழ வேண்டும்.

2. பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும். (சோளத்துடன்)

3. நோயற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும்.

4. 10 - 15 வண்டி/ஹெக்டர் தொழு உரத்தை இட வேண்டும்.

5. விதையை டி.விரிடி 4 கிராம்/கிலோ அல்லது சூ.ப்éரசன்ஸ் 4 கிராம்/கிலோ என்ற

அளவில் நேர்த்தி செய்யலாம்.

6. விதையை கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி நேர்த்தி செய்யலாம்.

7. மண்ணில் டி.விரிடி/ சூ.ப்éரசன்ஸ் 2.5 கிலோ/ஹெக்டர் என்ற அளவில் பயன்படுத்தி

இதனுடன் 50 கிலோ தொழுஉரத்தை கலந்து போடலாம்.

**அறிகுறிகள்:**

1.செடியின் எல்லா வளர்ச்சி நிலையிலும் இந்நோய் பரவுகிறது.

2.இலையின் மேல் பகுதியில் வெள்ளைநிற பூசணம் படிந்திருக்கும்.

3.பாதிக்கப்பட்ட இலைகள் பழுப்பு நிறமாக மாறி பின்னர் இறந்துவிடுகின்றன.

4.தீவிரமாக பாதிக்கப்பட்ட இலைகள்,தண்டுகள்,கரய்களில் பூசண வித்துக்கள் காணப்படுகின்றன.

<u>கட்டுப்பாடு:</u>

1.வயல்களில் முந்திய பயிரின் கழிவுகள் இல்லாமல் பார்த்துக் கெரள்ள வேண்டும்.

2.கார்பன்டாசிம் 1கிராம்/லிட்டர் அல்லது டைதேன்  எம் - 45 2-5 கிராம்/லிட்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம்.